1973 நவம்பர் 22]

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, வெள்ள நிவாரணத் திட்டத்திலே, ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள், டெண்டர் விட்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைகள், மத்திய அரசிடமிருந்து நிதி வராத காரணத்தால், கைவிடப்படும் நிலையில் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மத்திய அரசு கொடுப்பதாகச் சொன்ன தொகையில் பெரும் பகுதியைக் கொடுக்கவில்லை. எனினும் துவக்கப்பட்ட வேலைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, தமிழக அரசே மிச்ச வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான நிதியையும் நமது அரசே கொடுக்க வேண்டியுள்ளது. ஒத்துக்கொண்ட பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் கொடுப்பார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழில் சோதனையாக 'ள்' இருக்கிறது.

Construction of a Barrage across in Virisuzhi River in Thiruppathur Taluk

* 46. *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government for the construction of a barrage across the Virisuzhi river in K. Vairavanpatti, Meyapatti, Thiruppathur taluk, Ramanathapuram District; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

திருப்பத்தூர் வட்டம், விரிசுழி ஆற்றில் தடுப்பு அணை.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கே. வைரவன்பட்டி, மெய்யப்பட்டி கிராமம் விரிசுழி ஆற்றில் தடுப்பு அணை கட்டுவது பற்றி அரசுக்கு ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனல் தொழிற்துறை அமைச்சர் இவ்வட்டாரத்தில் சுற்றுப் பயணம் செய்யும்பொழுது விவசாயிகள் இத்திட்டத்திற்காக விண்ணப்பித்தார்கள்.

(இ) இத்திட்டம் தல அதிகாரிகளின் ஆய்விலுள்ளது.

Vilangudi-Thirumanur Bridge, Thanjavur district

* 47. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the construction of the Vilangudi-Thirumanur Bridge, Thanjavur District has been completed;

(b) if so, the reason for the long delay of its inaugural function; and

(c) the date from which buses will be premitted to ply through the bridge ?

தஞ்சை மாவட்டம் விளாங்குடி-திருமானூர் பாலம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) தஞ்சை மாவட்டம் விளாங்குடி-திருமானூர் பாலம் கட்டி முடிக்கப் பட்டு விட்டதா?

(இ) ஆமெனில், அதன் திறப்பு விழா பல மாதங்களாக தாமதப் பட்டிருப்பதின் காரணமென்ன?

(உ) எப்பொழுது முதல் பேருந்துகள் அப்பாலத்தின் வழியே செல்ல அனுமதிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ), (இ) & (உ) ஆம். அணுகு சாலை இன்னும் பலதரப்பட்ட சில்லறை வேலைகள் உட்பட பால வேலை 10—8—1973 தேதி அன்றுதான் முற்றுப்பெற்றது. 19—8—1973-ம் நாளன்று இப்பாலத்தின் திறப்புவிழா நடைபெற்றது. 20—8—1973-ம் நாள் முதல் பேருந்துகள் செல்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அந்தப் பாலம் திறக்கப்பட்டாலும்கூட, சென்ற மாதம் அதில் வருகிறபோது பாலத்திற்குப் பக்கத்தில் அணுகு பாலம் வேண்டுமென்ற காரணத்தால், அதில் கார்கள் போகாது என்று தெரிவித்தார்கள். அடிக்கடி இப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.